2003 மார்ச் 24]

தாத்தையங்கார்பேட்டையிலிருந்து இயக்கப்படும் தமிழக அரசு பேருந்தை மேட்டுப்பாளையம் வரை நீட்டித்தும் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அண்ணா தொழிற்சங்க பேரவையினுடைய மாவட்டச் செயலாளராகவும் இருக்கிறார். அவருக்கு இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக அந்தப் பகுதியிலிருந்து சென்னைக்கு நேரிடையாக புதிய பேருந்துகள் விடுவதிலே உள்ள இடர்பாடுகள் முழுமையாகத் தெரியும். இருந்தாலுங்கூட புதிய பேருந்துகள் இயக்குவதற்கு வாய்ப்பு இல்லை என்றபோதிலுங்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே அங்கு முசிறி பகுதியிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருக்கின்ற அந்த திருச்சி அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பேருந்தை, காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுகின்ற வகையிலே அந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பது குறித்து அரசு பரிவுடன் பரிசிலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 54, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

54—

மின் விளக்கு.

***7627—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அரியலூர் ஊராட்சி, சித்தாலத்தூர் வடக்குத் தெருவிற்கு புதிய மின் கம்பமும், மின் விளக்கும் அமைக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-55

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய தொகுதியிலேயுள்ள ஒரு சிற்றூராட்சியிலேயுள்ள ஒரு கிராமத்திலே மின் அபிவிருத்தி திட்டத்திலே விரிவுபடுத்தப்படுமா என்கிற கேள்வியைக் கேட்டிருக்கிறேன். இது ஒரு தொகுதியிலே மட்டுமல்ல, ஒரு கிராமத்திலே மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பிரச்சினை. ஒரு சிற்றூராட்சியில், ஒரு கிராமத்திற்கு அல்லது ஒரு தெருவுக்கு அல்லது ஒரு ஆதிதிராவிடர் தெருவுக்கு அவசியமிருந்தால் அங்கே ஒரு மின் கம்பத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னால், 6,000 ரூபாய் அந்த ஊராட்சி மூலமாகக் கட்ட வேண்டியிருக்கிறது. இப்போது, 3 காலாண்டு காலமாக சிற்றூராட்சிகளுக்கு நிதி வராத சூழ்நிலையில் அவர்களால் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்தின் மூலமாகவே அந்த விஸ்தரிப்பு செய்வதற்கான திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியச் சட்டப்படி அந்தந்த ஊராட்சியிலேயிருந்து பணத்தைக் கட்டி அவர்கள் விண்ணப்பம் மூலம் தெரிவித்தால் மட்டுமே, அதைச் செய்து தருகின்ற வகையில் சட்டம் இருக்கின்ற காரணத்தினால், அதைச் செய்ய இயலாது என்கிற முறையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 55, திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.